அரையாண்டு வெளியீடு மலர் - 02

# சாந்தம்

## 2013

ஜனவரி - ஜூன்



- பிரதேச செயலகத்தின் 2012 இன் அடைவுகள்
- மாணவர் களம்
- பொது அறிவு
- கவிதை
- கட்டுரை

DIVISIONAL SECRETARIAT - SAINTHAMARUTHU

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைவர் :**

A.L.M. சலீம்
(பிரதேச செயலாளர்)

**செயலாளர்/**
**இதழ் ஆசிரியர் :**

M.I.M. அஷ்ரப்
(கலாசார உத்தியோகத்தர்)

**கணனிப் பதிவு :**

A.M. ஹஸீப்
I.L. நிஹானுல் ஹக்
A.M. ஜஹான்
B. சியாம் ஹரீஸ்

**கணனி வடிவமைப்பு/**
**அட்டைப் படம் :**

M.M.M. அர்சத் (BBA)

**பக்க ஒழுங்கமைப்பு:**

M.I.M. அஷ்ரப்

**வெளியீடு :**

கலாசாரப் பிரிவு
பிரதேச செயலகம்
சாய்ந்தமருது.

**தொலைபேசி இல. :**
067 - 2221890

## என்னுரை

இது எமது இரண்டாவது வெளியீடாகும். சென்ற வருடம் எங்களால் வெளியிடப்பட்ட சாந்தம் 1 இதழ் பிரதேச செயலகத்திலும், செயலகத்திற்கு வெளியிலும் எமக்கு நல்ல ஆதரவையும், பாராட்டுதலையும் பெற்றுத் தந்ததோடு இப்படியான ஒரு வெளியீட்டின் அவசியத்தையும் உணர்த்தியது. அது தந்த நிறைவினால், பல தேவைப்பாடுகள் இருந்த போதும் வெளிக்கொணர வேண்டும் என்ற ஆதங்கம் மிகைத்ததால் இந்த இரண்டாவது இதழ் உருப்பொற்றது.

இதில் காரியாலய நண்பர்களின் ஆக்கங்கள், அவர்களின் சிறார்களின் ஆக்கங்கள், காரியாலய தகவல்கள் என்பவற்றோடு பட்டதாரிகளாக பணிபுரியும் சகோதரர்களின் உள்ளக் கிடக்கைகளும் இதற்கு சிறப்புச் சேர்க்கின்றது. மேலும் சென்ற வருடம் எம்மை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து சென்ற சகோதரியையும் இதில் நினைத்துப் பார்க்கின்றோம்.

அந்த வகையில் இதற்கு ஆலோசனை வழங்கி ஆர்வமூட்டிய பிரதேச செயலாளருக்கும், ஆக்கங்கள் வழங்கிய உள்ளங்களுக்கும், கணனி வடிவமைப்பு, அட்டைப்படம் போன்றவற்றில் உதவிய சகோதரர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"இங்குள்ள அனைவருக்கும் இது ஒரு களம், சளைக்காது எழுதுவோருக்கு இது ஒரு வரம்"**

**எம்.ஐ.எம். அஷ்ரப்**
**இதழ் ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச செயலாளரின் வாழ்த்துரை.

சென்ற ஆண்டிலிருந்து வெளிவரும் சாந்தம் என்ற வெளியீடானது இம்முறையும் பல அம்சங்களைத் தாங்கி வெளி வருவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ் வெளியீடு மூலம் எதிர்பார்க்கப்படுவது இக்காரியாலயத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளது ஆக்கங்களை வெளிக்கொணர்வதுடன் மற்றுமொரு நோக்கமான இப்பிரதேச செயலகத்தில் செயற்பாடுகள், சேவைகள் சம்மந்தமாக காலத்திற்குக் காலம் பொது மக்களுக்கு அறிவூட்டுவதாகவும் அமைந்து காணப்படுகின்றது. குறிப்பாக சென்ற ஆண்டு எமது பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்ட பட்டதாரிகளுக்கும் இவ்வெளியீட்டில் அவர்களது ஆக்கங்களை வெளிக்கொணர்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

மேலும் இவ்வெளியீடானது இம்முறை பல்வேறு பல்சுவை ஆக்கங்களுடன் வெளிவருவதற்கு ஆக்கங்களை வழங்கிய ஊழியர்களுக்கும் இவ்வெளியீடுகளை வெளிக்கொணர்வதற்கும் எழுத்தாளர்களின் ஆக்கங்களை ஊக்குவிப்பதற்கும், இவ்விதழை ஒரு சாதனமாகப் பயன்படுத்தியிருக்கும் பிரதேச செயலக கலாசாரக் குழுவுட்பட, கலாசார உத்தியோகத்தர் ஜனாப். எம்.ஐ.எம். அஷ்ரப் அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு இவ்விதழ் வருடா வருடம் தொடர்ந்து வெளிவர எனது மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஏ.எல்.எம். சலீம்.**
**பிரதேச செயலாளர்,**
**சாய்ந்தமருது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த பிரஜைகளுக்கான பொறுப்புக்கள்

தனிப்பட்ட பெறுமதிகளுக்கமைவாகவும் சுகாதார தனிப்பட்ட சூழ்நிலைகள் அனுமதிக்கும் வகையிலும் மூத்த பிரஜைகள் பின்வருமாறு இருக்க எத்தனித்தல் வேண்டும்.

- ➢செயற்திறனுடைய தகைமையுள்ள தன்னம்பிக்கையுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
- ➢தமது செந்த வாழ்கையில் உடல்,உள,சமூக, சுகாதாரம் ஆகியவற்றில் உறுதியான தத்துவங்களைக் கற்று பிரயோகித்தல் வேண்டும்.
- ➢முதிர்ந்த வயதுக்கும், ஓய்வு பெறுவதற்கும் திட்டமிட்டு தயார்படுத்தல் வேண்டும்.
- ➢தொழில் தேடுவதில் தமது அறிவையும் திறமைகளையும் காலத்திற்கு ஏற்றவாறு அமைத்தல்.
- ➢மாறும் உறவுகளின் தேவைகளுக்கேற்ப சீராக்கும் போது நெகிழ்வுத் தன்மையுடன் பிற குடும்ப அங்கத்தவர்களுக்கும் இடமளித்தல்.
- ➢இளம் சந்ததியினருடன் தனது அறிவையும், திறனையும் பெறுமதிகளையும் பங்கிடல்.
- ➢அவர்களது சமூதாயத்தின் குடியுரிமை வாழ்வில் பங்கு கொள்ளல்.
- ➢சமுதாயத்திற்கு காத்திரமான சேவையை வழங்கக் கூடிய இடங்களை தேடுதலும், அபிவிருத்தி செய்தலும்.
- ➢அவர்களது சுகாதார கவனிப்பு பற்றி அறிவிக்கப்பட்ட தீர்மானங்ளை எடுத்தல்.
- ➢மூத்த பிரஜைகள், கவனிப்பாளர்கள், சுகாதார மற்றும் நலன்புரி தொழில் வல்லுனர்கள் ஆகியோரது உரிமைகளை சமமாக மதித்தல்.

### ஐ. நா. சாசனத்தில் குறிப்பிடப்பட்ட விசேட
### தேவையுடையோருக்கான முக்கிய உரிமைகள்

- ❖சமத்துவமும் பாரபட்சமின்மையும்
- ❖அணுகும் வசதி
- ❖வாழ்வாதாரத்திற்கான உரிமை
- ❖சட்டத்தின் முன் சம அங்கீகாரம்
- ❖கல்வி உரிமை
- ❖சுகாதார உரிமை
- ❖தண்டனை, இழிவு, மனிதாபிமான மின்மை, குரூர வதைகளிலிருந்து சுதந்திரம்
- ❖துஸ்பிரயோகம், வன்முறை முற்றும் சுரண்டலிலிருந்து விடுதலை
- ❖சமூகத்தோடு இணைந்து சுதந்திரமாக வாழல்
- ❖தொழில் வாய்ப்பு மற்றும் இன்னும் பல உரிமைகள்

**நாம் அனைவரும் இவ்வுரிமைகளை**
**இனியாவது இணைந்து வழங்குவோம்**

**சமூக சேவைகள் பிரிவு**
**அ.அ.மு. அஷ்சன்**
**நிகழ்ச்சி திட்ட உதவியாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "The Night"

The Night is a period of darkness
From one day to the next.
Time from sunset to sunrise,
Darkness of evening...

Night fall!
Cap worn in bed,
Drink before you go to bed,
Late at night

Women's or Children's loose garment worn in bed
Night fall out
Nightmares terrifying dreams,
End of daylight

Nightingale flying,
Owls and bats are flying,
Dogs start to bark,
In the dark night

The moon hides and shades,
Kindly the stars twinkle at me,
The sky starts shining
And I nibble at my bed

Oh! Now I am free at this night
And I am very drowsy in my bright shiny night sky!

**Fathima Afritha Saleem**
**Grade - 06.**
**Ilma International Girls' School**
**Colombo.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலதிக மாவட்ட பதிவாளர் பிரிவுத் தகவல்கள்

2012 டிசம்பர் வரை

| | | |
|---|---|---|
| 1) | தேடுதல் அற்ற விண்ணப்பம். (A) | 3753 |
| 2) | தேடுதல் உள்ள விண்ணப்பம். (B – C) | 734 |
| 3) | திருமணப் பதிவு | 257 |
| 4) | விவாகரத்து | 31 |
| 6) | பிறப்பு பதிவு | 30 |
| | (ஆண் - 11 , பெண் - 19) | |
| 7) | மரணப் பதிவு | 92 |
| | (ஆண் - 46 , பெண் - 46) | |
| 8) | தேடுதல் அற்ற விண்ணப்ப முத்திரை காசு (A) வருமானம் | 164,400/= |
| 9) | தேடுதல் உள்ள விண்ணப்ப முத்திரை காசு (B - C) வருமானம் | 38,850/= |
| | மொத்த முத்திரை வருமானம் | 203,250/= |
| | விவாகவிவாகரத்து முத்திரை வருமானம் | 36,295/= |

தகவல்: **AL. நூர்டீன் (P.M.A)**

## சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் ஓய்வூதிய விபரங்கள்

(2012 டிசம்பர் வரை)

| | | |
|---|---|---|
| சிவில் ஓய்வூதியம் பெறுபவர்கள் | - | 182 பேர் |
| விதவை ஓய்வூதியம் பெறுபவர்கள் | - | 105 பேர் |
| அநாதை ஓய்வூதியம் பெறுபவர்கள் | - | 04 பேர் |
| மொத்தம் | - | 291 பேர் |

தகவல் :- **ஏ. சுலீமா (P.M.A)**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எது நிஜம்

கனவுகள் கற்பனைகள்
நினைவலைகள் நிறைந்த
நவீன யுக சாதனங்களையும்
விஞ்சிய ஓர் அற்புதமான
படைப்பே மனிதன் !

அப்பப்பா ! இறைவனின்
விசித்திரமான ஆற்றல்களை
மனித உடல் மற்றும்
ஆண்மா பற்றி
அறியும் போது புரிகிறது.

ஆனால் வியப்பான
இந்த வாழ்வோ
சிலருக்கு இளமை வரை
சிலருக்கு முதுமை வரை
இன்னும் சிலருக்கு அதிக
கால சுழற்சிற்குப் பின்னர்

அதோ ஒரு நண்பன்
வருகிறான் தேடி......
அவன் அழைப்புக்கு பதில்
அளித்தவர்கள் மண்ணறையில்
படுத்துக் கொண்டிருக்கின்றனர்
நிதர்சனமாய்

வாழ்வின் உண்மையான
நிஜமான இரகசியம் என்பது
மரணம் மட்டுமே
நண்பா நிஜமான
மரணத்திற்காக நித்தமும்
செயல்பட்டு உண்மையான
ஆனந்தத்தை அடைவாய்

**M.A. முனாப் B.A (Hon)**
**பட்டதாரிப் பயிலுனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞனும் இளைஞர் கழகமும்

இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சிறந்த தூரநோக்கு திட்டத்தின் அடிப்படையில் சமூகம், பொருளாதாரம், அரசியல், விளையாட்டு கலாச்சாரம் ஆகிய துறைகளினுடாக இளைஞர்களை வலுவூட்டி சர்வ சக்தியுள்ள இளைஞர்களாக உருவாக்கும் வகையில், இளைஞர் நவோதய வேலைத்திட்டத்தின் கீழ் படித்துவிட்டு, படித்துக்கெண்டிருக்கின்ற 13 தொடக்கம் 20 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகளை ஒன்றுதிரட்டி உரிய கிராம சேவை அதிகார பிரிவில் இளைஞர்களை பங்குதாரர்களாக இணைத்து இளைஞர் கழகம் அமைக்கப்படுகின்றது.

இவ் இளைஞர் கழக அமைப்பில் ஒரு அங்கத்தவராக இணைந்து கொள்வதற்கு முன்னர் இளைஞர் சத்தியப் பிரமானம் செய்ததன் பின்னர் தான் ஒரு யுவதியோ இளைஞனோ இளைஞர் கழகத்தில் இணைந்து கொள்ள முடியும் அவையாவென நான் ஒற்றுமை, நட்பு, ஒத்துழைப்பு, அபிவிருத்தி ஆகிய நான்குவித சத்தியப்பிரமானங்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதாகும்.

நவீன யுகத்தின் தேவைக்கேற்ப இளைஞர்களை எதிர்கால அபிவிருத்திப் பாதையில் சிறந்த முறையில் முன் கொண்டு செல்லும் வகையில் இலவச ஆங்கில சிங்கள பயிற்சிகள், இளைஞர் விருது, வறிய இளைஞர்களுக்கு கிராமிய இளைஞர் வீடமைப்பு, இளைஞர் பாராளுமன்ற வேலைத்திட்டம், நுண்ணறிவு, அறிவுப்புதிர் போட்டிகள், கலை கலாச்சார நிகழ்வுகள், இளைஞர்களின் விளையாட்டுத்துறையினை மேம்படுத்தும் வகையில் விளையாட்டு பயிற்சிகள் மற்றும் இளைஞர் தினத்தில் இளைஞர் கௌரவிப்பும் இளைஞர் பாராட்டுதலும், இளைஞர்களுக்கிடையே நல்லுறவைப் பேணும் பொருட்டு இளைஞர் உறவுப்பாலம், வெளிநாட்டு புலமைப்பரிசில், இளைஞர்களின் தொழில் மேம்பாடடினை கருத்தில் கொண்டு துறைரீதியான பயிற்சிகள் மற்றும் துறைசார் கல்வி ஊட்டல், இது தவிர இளைஞர்களின் சுயமான சிந்தனா சக்தியை மெருகூட்டும் வகையில் இளைஞர் கழகத்தின் மூலம் மரபுரீதியான மனோதத்துவ உடல் உள ரீதியான அறிவூட்டல் வேலைத்திட்டங்கள் போன்றன இந்த இளைஞர்களுக்கு இளைஞர் கழகம் மூலமாக செயற்படுத்தப்படுகின்றது.

எனவேதான் இந்த இளைஞர் கழகமானது இளைஞர்களை வேறு சிந்தனைகளிலிருந்து விடுவித்து தனது எதிர்கால முன்னேற்றப் பாதையினை கருத்தில் கொண்டு இளைஞர்களுக்காக சகல விதமான ஆக்கபூர்வமான செயற்றிறன்கள் முன்னெடுக்கப்படுகிறது. எனவே ஒரு இளைஞனுக்கு இளைஞர் கழகம் இன்றியமையாத ஒன்றாக உள்ளது என்றால் அது மிகையாகாது.

தகவல்- **எம்.ஐ.எம். பரீட்**

**(இளைஞர் சேவை அதிகாரி)**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதில் சர்வதேச சட்டங்களும் இலங்கை சட்டங்களும்

## 1) சிறுவர்கள் என்போர்...

உலகின் சகல பிள்ளைகளினது உரிமைகளையும் உள்ளடக்கியவாறான ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்கள் உரிமைகள் பிரகடனமானது சிறுவர் என்பதற்கு குறிப்பான வயது எல்லையையும், மிகவும் தெளிவான வரைவிலக்கணத்தையும் குறிப்பிட்டுள்ளது. அவ்வகையில் 18 வயதிற்குட்பட்ட அனைத்து மனித பிறவிகளும் சிறுவர் என்ற வரைவிலக்கணத்திற்குள் உள்ளடங்குவர். எவ்வாறாயினும் எமது நாட்டில் சிறுவர்களை சட்டத்தின் மூலம் வரைவிலக்கணப்படுத்த குறிப்பான வயது எல்லையொன்று கூறப்பட்டுள்ளது.

- சர்வதேச சிறுவர் சமவாயம் பற்றிய வயதெல்லை - 18 வயதிற்குட்பட்டவர்கள்
- சிறுவர் இளம்பராயத்தவர் சட்டம் பற்றியது - 14 வயதிற்குட்பட்டவர்கள்
- பெண்கள், தொழிற் சட்டம், இளம்பராயத்தவர் கட்டளைச்சட்டம், சிறுவர்களை வேலைக்கமர்த்தல் தொடர்பான சட்டம், தெருச் சுற்றிகள் சட்டப்பிரமானம் என்பனவை பற்றியது - 16 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளை சிறுமி என்றும்
- இலங்கை தண்டனைச் சட்டக்கோவை பற்றி - 18 வயதிற்குமேற்பட்டவர்
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம், பராமரிப்பு கட்டளைச்சட்டம் இலங்கை சிறுவர் சாசனம், சர்வதேச சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் பிரகாரம் பற்றி - 18 வயதிற்குட்பட்டவர்கள் சிறுவர்களாகும்.
- அவ்வாறே சில சட்டங்கள் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையிலான வேறுபாட்டைக் கூறுகிறது.

## 2) சிறுவர் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய தேவை என்ன?

சிறுவர்கள் உடல் உள ரீதியாக முழுமையாக வளர்ச்சி அடைந்தவர்களல்ல என்பது மருத்துவ விஞ்ஞானத்தின் கருத்தாகும் அவ்வகையில் அவர்களை இலகுவான முறையில் வழிதவறச் செய்யமுடியும் என்பதால் அவர்கள் தொடர்பாக விஷேட கவனிப்பு வழங்கவேண்டும் என்று சிறுவர் உரிமை சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3) சிறுவர் உரிமைகள் சமவாயம் (Convention on the Rights to the Child – C.R.C)

சர்வதேச சிறுவர் உரிமைகள் சமவாயம் 1989ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் சிறுவர்கள் உரிமைகளைப் பாதுகாப்பதனையும் மேம்படுத்துவதனையும் இலக்காகக் கொண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் சிறுவர்களின் குடியியல், அரசியல், பொருளாதார, பண்பாட்டு உரிமைகள் விபரிக்கப்பட்டுள்ளன.

சிறுவர் உரிமை சமவாயம் என்பது மொத்தம் 54 உறுப்புரைகளைக் கொண்டுள்ளது. அதில் 01 முதல் 42 வரையான உறுப்புரைகள் பின்வருமாறு கூறுகின்றது.

- சிறுவர்களுடைய உரிமைகள்
- சிறுவர் வரைவிலக்கணம்
- சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக பெற்றோர்கள் உட்பட பராயமடைந்தவர் களுக்குள்ள பொறுப்புக்கள் தொடர்பாக விபரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய 43 முதல் 54 வரையான உறுப்புரைகள் உடன்படிக்கையில் கையொப்பமிட்டிருக்கும் அரசாங்கங்கள் கடைப்பிடிக்க வேண்டிய செயற்பாடுகள் பற்றி விபரிக்கின்றது. அதாவது இச்சமவாயத்தை 2009ம் ஆண்டு நவம்பர் வரை ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் 193 நாடுகள் ஏற்று கையெழுத்திட்டுள்ள போதிலும் ஐக்கிய அமெரிக்கா, சோமாலியா, தென் சூடான் ஆகியவை கையேழுத்திடவில்லை.

இவ்வாறாக பல்வேறு சட்டங்களில் சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் இலங்கையில் காணப்படுகின்றன.

1) சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் அரச நிறுவனங்கள் பின்வருமாறு

- சிறுவர் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களம் (Department of Probation & Child Care Services)
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ( National Child Protection Authority – NCPA)
- மாவட்ட சிறுவர் அபிவிருத்தி சபை (The District Child Development Committee – DCDC)
- இலங்கை மனித உரிமை ஆணைக்குழு (Human Rights Commission of Sri Lanka – HRC)
- பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் நடவடிக்கை பணியகம் (Women & Children Desk Police Station)
- தொழில் திணைக்களம் (Department of Labour)

ஆக்கம் : **திருமதி எம்.எஸ். நஸ்பி சிபானா.**
**(நன்னடத்தை உதவியாளர்)**

---

## பொது அறிவு

1. .உலகிலே அதிக பூக்கள் மலரும் நாடு எது - நெதர்லாந்து
2. படகு வடிவில் அமைந்துள்ள நாடு எது - இத்தாலி
3. உலகில் துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு - ஸ்பெயின்
4. திரும்பாமலே பின்பக்கம் பார்க்கும் மிருகம் எது - ஒட்டகச் சிவிங்கி
5. மாகாணசபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது - 1987
6. அதிக மழை பெய்யும் இடம் எது - சீறாபுஞ்சி
7. மகாத்மா காந்தி எந்த ஆண்டில் பிறந்தார் - 1869
8. இந்தியா நிலப்பரப்பில் எத்தனையாவது நாடு - 7வது
9. எறும்பின் உடலில் காணப்படுவது என்ன அமிலம் - போலிக் அமிலம்

**முகம்மட் இல்ஹாம் சப்றி (6A)**
**கமு /ஸாஹிறா தேசிய பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவிநெகும தேசிய வேலைத்திட்டம்

"வாழ்வாதார மற்றும் சமூகஅபிவிருத்தி செயற்பாடுகள் ஊடாக 2016 ம் ஆண்டில் வளங்கள் நிறைந்த சுபீட்சமான கிராமத்தை உருவாக்குவோம்" (மஹிந்த சிந்தனை தூரநோக்கு) என்ற நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக இந்த வேலைத்திட்டம் 2011 ம் ஆண்டில் நமது நாட்டில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது, வாழ்வின் எழுச்சி என்ற இந்த வேலைத்திட்டத்தின் 1ம் கட்டத்தில் 10 லட்சம் மனைப் பொருளாதார அலகுகளை விருத்தி செய்தல் என்றநோக்கின் அடிப்படையில் அறிமுகம் செய்யப்பட்டு இன்று இந்தத் திட்டம் 4 கட்டங்கள் வரை நிறைவு பெற்றுள்ளது.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உலக உணவுநெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில் கிராமங்கள் தோறும் வீட்டுத் தோட்டங்களை உருவாக்கி அதனுடன் இணைந்ததாக பழ உற்பத்தி, முட்டை உற்பத்தி, கால்நடை வளர்ப்பு ஆகியவற்றையும் மேற் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது நாட்டின் சகல கிராமங்களையும் உள்ளடக்கியவாறு வீட்டுத் தோட்டம், கால்நடை வளர்ப்பு, குடிசைக் கைத்தொழில் ஆகியதுறைகளில் தேர்ச்சிபெற்ற மனைப் பொருளாதார அலகுகளை உருவாக்குவதே இதன் பிரதானமான அடிப்படையாகும் நாட்டில் வாழும் சகல குடும்பங்களையும் தண்னிறைவுமிக்கதான சுய தேவையை பூர்த்திசெய்யத்தக்கதாக மேம்படுத்தி வறுமையற்ற நாடாக எமது நாட்டை உருவாக்குவதும் இதன் மற்றுமொரு முக்கிய குறிக்கோளாகும் இத்திட்டத்தின் மூலம் நாட்டில் வாழும் ஒவ்வொரு குடும்பத்தையும் பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் பிரதானமான நோக்கங்களாவன.

01. உணவுப் பாதுகாப்பைஉறுதிப்படுத்தல்.
02. குடும்ப அங்கத்தவர்களது போஷாக்கு மட்டத்தை உயர்த்துதல்.
03. ஒவ்வொரு குடும்பத்தினதும் மாதாந்த வருமானத்தை அதிகரித்தல்.
04. இவ் அதிகரிப்பின் மூலமாக தேசிய பொருளாதார அபிவிருத்தியைஅடைதல்.

இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படும் குடும்பத்துக்கு

01. தேவையான வழிகாட்டல்கள்
02. பயிற்சிகள்
03. வாழ்வாதார உதவியும்,மற்றும் உதவிச் சேவைகளும் வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வேலைத்திட்டத்தினை கிராமிய மட்டத்தில் செயற்படுத்தும் உத்தியோகத்தர்களாக கிராமசேவை அதிகாரிகளும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், விவசாய ஆராய்ச்சி உதவியாளர்களும் செயற்பட்டுவருகின்றனர்.

இந்த வேலைத்தட்டத்தை எதிர்காலத்தில் மேலும் வினைத்தறன்மிக்கதாக செயற்படுத்தும் பொருட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் திவிநெகும திணைக்களம் என்ற திணைக்களம் கடந்த 2013 ஜனவரி 08 ம் திகதிமுதல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்படத்தக்க அம்சமாகும்.

தகவல்- **ஏ.சீ.ஏ. நஜீம்**
**சமுர்த்திமுகாமையாளர்**

---

## சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவினால் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள்.

01. சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி, சமூக அபிவிருத்திப் பிரிவினால் விதவைகளுக்கான வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2012ம் ஆண்டு 75000/= பெறுமதியான ஒன்பது வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

வீடு அமைத்து கொடுக்கப்பட்ட கிராம சேவகர் பிரிவுகள்.

1. ஜமாஹிரியா வீதி, சாய்ந்தமருது- 02
2. மாவடி வீதி, சாய்ந்தமருது - 03
3. பழைய சந்தை வீதி, சாய்ந்தமருது- 03
4. மாவடி வீதி, சாய்ந்தமருது - 04
5. பழைய தபாலக வீதி, சாய்ந்தமருது-09
6. கடற்கரைவீதி, சாய்ந்தமருது 12
7. கல்யாண வீதி, சாய்ந்தமருது - 14
8. ஆலிம் வீதி, சாய்ந்தமருது - 16
9. கபூர் வைத்தியர் வீதி, சாய்ந்தமருது - 16

02. மேலும் சமுர்த்தி சிறுவர் கழகங்களுக்கு இடையே நடாத்தப்பட்ட மாவட்ட மட்ட கலை, கலாச்சார போட்டியில் 1ம் இடத்தை மூன்று பேரும், 2ம் இடத்தை இரண்டு பேரும், 3ம் இடத்தை இரண்டு பேரும் பெற்றுக் கொண்டதோடு, தேசிய மட்ட போட்டியில் 1ம் இடத்தை ஒருவரும் 3ம் இடத்தை ஒருவரும் பெற்றுள்ளனர்

03. அத்தோடு 20 வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும், 17 பேருக்கு சிசுக்களுக்கான புலமைப்பரிசிலும் வழங்கப்பட்டுள்ளது.

தகவல்- **எம். சஹாப்தீன்**
**(சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேஸ்புக்

தொழிநுட்ப ஆதிக்கத்தின் மற்றுமொரு பரிணாமம் தான் பேஸ்புக். இணையத்தள உலகில் மிகப் பெரிய அளவில் செயற்படும் நிறுவனங்களில் பேஸ்புக்கும் ஒன்று. சமூக வலைத்தளமான (Social Network) பேஸ்புக் 28 ஒக்டோபர் 2003 இல் ஹாவாட் பல்கலைக் கழக மாணவரான மார்க் ஸுக்கர் பேர்க் இனால் உருவாக்கப்பட்டது. பல்கலைக் கழக மாணவர்களை ஒன்றிணைக்க ஆரம்பிக்கப்பட்ட இத்தளம் மீதான அபிமானத்தால் பெரிய அளவிலும் வர்த்தக ரீதியிலும் 2004 பெப்ரவரி முதல் உத்தியோக பூர்வமாக உலகுக்கு அறிமுகஞ் செய்யப்பட்டது.

இன்று பல மில்லியன் வாடிக்கையாளர்களை கொண்டுள்ள இத்தளமானது பல்தேசிய, நடுத்தர கம்பனிகளின் விளம்பர ஊடகமாகவும், கேளிக்கை ஒன்று கூடலாகவும், பல்துறை அம்சங்களின் பிறப்பிடமாகவும், மறுபுறம் சமூக சீர்கேடுகளுக்கும், புதுவித குற்றச் செயல்களுக்கும் பெயர் போனது.

இலங்கையைப் பொறுத்தவரை பேஸ்புக் மூலம் இலங்கை கணணி பாதுகாப்பு அவசர அழைப்பு பிரிவுக்கு 1150 பெரியளவிலான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளது.

மேலும் பேஸ்புக் பயன்படுத்துவோர் தமது தகவல்கள், புகைப்படங்கள், வீடியோக்கள் தொடர்பில் பாதுகாப்பான வழிமுறைகளை கையாள வேண்டியுள்ளது.

உங்களது time line இல் பிறர் tag செய்வதை தடுக்கவும் வழிகள் உண்டு (விபரங்களுக்கு www.pluslk.com clik world & tec)

மேலும் பேஸ்புக் இற்கு மட்டுமின்றி பிற தேவைகளுக்காகவும் ஒன்லைனில் கட்டணங்கள் செலுத்தும் போது அவை https இல் உள்ளதா என்பதையும் உறுதி செய்து கொள்ளவும் அத்துடன் பேஸ்புக் பாவனையாளர்கள் அதனது security எனும் page இனை like செய்வதன் மூலம் புதிய பாதுகாப்பு வழிமுறைகளை அறிந்து கொள்ளவும் முடியும்

உலகில் பெரும்பாலான விடயங்களில் நன்மையும் தீமையும் கலந்திருப்பது யதார்த்தமே. அவற்றில் நன்மைகளை எடுத்து நடப்பது எமது கைகளிலேயே தங்கியுள்ளது.

தகவல்- **M.I.M.றிஸ்வான்**
**(பட்டதாரி பயிலுனர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Something I learned from a bad experience

Once I went to school late and it was the day of my exam. So, I had lost half an-hour, and I couldn't finish my test paper completely.

A few weeks later, we got our results. For all the subjects I got "A" grade except for the one which was held on the day. I got late and it was me who got the least marks for that particular subject in the class. As a result, it also affected my rank unusually that never happened in other exams. I was so upset and depressed and could not accept the fact that I became seventh due to the delay on a very important day.

I realized that a five letter word that is "DELAY" caused a miserable and unforgettable incident which I will never want to know or have in my life again.

On the very next day itself I swore that I will never get late again to the school.

The End!

**Fathima Afritha Saleem, Grade - 06.**
**Ilma International Girls' School**
**Colombo.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமையற்றதோர் இலங்கை தேசம் 2013

அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் 2013ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து ஆற்றிய உரையில் வறுமையற்றதோர் இலங்கையை கட்டியெழுப்பும் இலக்கினை அடைந்து கொள்வதற்காக சகல அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் நிருவாகிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கௌரவ பசில் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கிணங்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் இவ்வேலைத்திட்டத்தை மிகவும் பயனுள்ளதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் நடைமுறைப்படுத்த இவ்வமைச்சு வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

இவ்வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அனைத்து அமைச்சுகளின் ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் விவசாய அமைச்சு, கமநல சேவை மற்றும் வனஜீவராசிகள் அமைச்சு, சிறு ஏற்றுமதிப் பயிர் அமைச்சு, பெருந்தோட்ட கைத்தொழில் நீர்பாசன நீர்வள முகாமைத்துவ அமைச்சு, தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு, கால்நடை வள கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு, கடல் தொழில் நீரியல் வள அமைச்சு, கைத்தொழில் மற்றும் வசதிகள் அமைச்சு, தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, பாரம்பரிய கைத்தொழில் அமைச்சு என்பன இதில் முக்கிய பங்காற்றவுள்ளன. அத்துடன் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி என்பனவும் இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

திவிநெகும திட்டத்திற்கு இணைவாக செயற்படுத்தப்படவுள்ள வறுமையற்றதோர் இலங்கை தேசம் எனும் இவ்வேலைத்திட்டங்கள் பற்றி அரசாங்க அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் செயலமர்வுகள் கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பிரதேச செயலகங்களின் ஏற்பாட்டில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் பிரதேசத்திலுள்ள மதத்தலைவர்கள், அமைச்சுக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூர்த்தி முகாமையாளர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் பட்டதாரி பயிலுனர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், தெண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம உத்தி யோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், சமூக சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகள், சுகாதார சேவை அலுவலர்கள், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், மகளிர் முதியோர் மூத்த பிரஜைகள் போன்ற கிராமிய அமைச்சுக்களின் தலைவர்கள் மற்றும் அவசியப்படும் பிரதேச மட்ட அலுவலர்களும் இதில் பங்கேற்றனர்.

பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் அமுல்படுத்தப்படவுள்ள வறுமையற்றதோர் இலங்கை தேசம் எனும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த சகலரதும் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

தகவல்- **ஏ.பி.எம்.அஸ்ஹர்.**
**திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்**

---

## சாய்ந்தமருதிலுள்ள மாதர் சங்கங்கள்

| Name of Societies Division | Address |
|---|---|
| 01) Marumalarchi Women's Society | 182/2, Zahira College Rd, SM - 01 |
| 02) Thoofa Women's Society | 182, Orabibasha Rd, SM - 02 |
| 03)Kathija Women's Society | 394,Zatkuru Mathrasha Rd,SM03 |
| 04)Al-Mina Women's Society | 611B,Old Post Office Rd,SM04 |
| 05)Nooraniya Women's Society | 156, P.M.Rd SM - 05 |
| 06)Al-Issath Women's Society | 286,P.M. Rd SM - 06 |
| 07)Jennathul Firthows Women's Society | 420, Thona Lane SM08 |
| 08)Boliverian Women's Society | 351, BoliverianSM - 09 |
| 09)Al-Jensy Women's Society | 151D,Old Post Office Rd SM10 |
| 10)Al-Ushama Women's Society | 233D, Veppayadi Rd SM - 12 |
| 11)Fazeela Women's Society | 180, Hajyar Rd SM - 13 |
| 12)Al-Fathima Women's Society | 472A, Aalim Rd SM - 16 |

தகவல் :- **A.R. றிஸ்வானுல் ஜன்னா (W.D.O)**
**I. கிே'ார் ஜஹரான் (R.S)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையேந்திப் பிரார்த்திக்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றி சென்ற வருடம் எங்களை விட்டு மறைந்த சகோதரி ஐ.எல் ஜெமீலாவுக்காக எங்களால் எழுதப்பட்ட இரங்கற் பா இது. அன்னாரின் ஒரு வருட நிறைவின் நிமிர்த்தமும் அன்னாரை நினைவுகூரும் முகமாகவும் அதில் ஒரு பகுதியை மீழ் பிரசும் செய்கின்றோம்.

அன்று சோகத்தோடு விடிந்தது பொழுது
துக்க கரமான செய்தியொன்றை
அது சுமந்து வந்ததனால்
ஆம், ஐ.எல். ஜெமீலா அவர்கள்
இறையடி சேந்து விட்டார் என்ற தகவலை
எம்மிடம் சொல்லிச் சென்றது அது

செய்வதறியாது துவண்டோம் நாங்கள்
அது திடீரென்று எங்களை வந்தடைந்த செய்தி
சோகம் தாளாதவர்களாக கண்கள் கலங்கியவர்களாக
குழுமிக் குழுமி நின்று அனைத்து உத்தியோகத்தர்களும்
வேதனையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்

எல்லோருடனும் அன்பாக முரண்படாதவராக
உதவி செய்பவராக பழகிய ஒருவர் ஜெமீலா
உத்தியோகத்தர்களின் சுயவிபரக் கோவைகளை
தன் சொந்தக் கோவை போல்
சிறப்புடன் செய்து வந்தவர்

அரச முகாமைத்துவ சேவையில் 1993ல்
காலடி எடுத்து வைத்து அதில்
19 வருடங்களாக நடந்துகொண்டிருந்தார்
கல்முனை சாய்ந்தமருது காரைதீவு
மீண்டும் சாய்ந்தமருது என தொடர்ந்திருந்த
சேவையை இடைநடுவில் விட்டுச்செல்ல
வந்தது இறைவன் ஆணை

நாங்கள் பிரயாணிகள்
வாகனம் வரும் வரை காத்திருக்கின்றோம்
தரிப்பிடத்தில் நின்றிருக்கும்
அந்த நேர அளவுதான் இந்த வாழ்க்கை
உரிய வாகனம் வந்தால் நாங்களும் சென்று விடுவோம்

இதுதான் அல்லாஹ்வின் ஏற்பாடு
எம் வாழ்வும் மரணமும் அவன் என்றோ எழுதியது
அல்லாஹ் உங்கள் சேவையை,
நல் அமல்களை பொருந்திக் கொள்ளவேண்டும்
ஜன்னத்துல் பிர்தௌசை வழங்க வேண்டும்
என கையேந்திப் பிரார்த்திக்கின்றோம்

**பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்கம் சார்பாக**
**ஆக்கம் – எம்.ஐ.எம். அஸ்ரப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2012/2013 ம் ஆண்டின் ஊழியர் நலன்புரிச் சங்கம்

மேற்படி 2012/13 ம் ஆண்டுக்கான நலன்புரிச்சங்க புதிய நிர்வாக சபையினை தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் 2012.07.14ம் திகதி நடைபெற்றது. இதன் போது தலைவர், செயலாளர், பொருளாளர்களாக முறையே ஏ.சி.ஏ.நஜீம், எம். இஸட் எம். றியாஸ், ஏ.ஏ.எம். அஹ்சன் ஆகியோரும் உப.தலைவர், உப செயலாளர்களாக, எம். றபீக், எல். நாசர் ஆகியோரும் கணக்காய்வாளராக ஏ.சி முஹம்மட் உடன் 11 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் இத்தினத்தில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றோருக்கும், ஓய்வு பெற்றோருக்கும் பிரியாவிடை வைபவங்களுடன் ஞாபகார்த்த பரிசில்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் புதிய நிர்வாக சபைக்கு தெரிவு செய்யப்பட்ட சபை உறுப்பினர்களினால் சகல உத்தியோகத்தர்களது பங்களிப்புடன் பின்வரும் விடையங்கள் முன்கொண்டு செல்லப்பட்டன

Ï% மார்க்க சொற்பொழிவுடன் இப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பிரதேச செயலகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்களை வரவேற்கும் நிகழ்வு சிறப்பம்சமாக அமைந்திருந்தது. பின்னர் நிர்வாக சபை உறுப்பினர்களின் பங்களிப்புடன் முதற்தடவையாக நோன்புப் பெருநாளை முன்னிட்டு விஷேட சிற்றுண்டி வைபவமும் ஏற்பாடு செய்யப்பட்டது.

Ï% தெயட்டகிருள வினை முன்னிட்டு நடைபெற்ற நடமாடும் சேவைக்கான சிற்றுண்டி, மற்றும் பகல் போசனம் என்பவற்றையும், இதன்போது வருகை தந்த உத்தியோகத்தர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் விஷேடமாக பகல் உணவு **Bufet System**மாக நடைபெற்றது சிறப்பம்சமாக கருதப்பட்டது.

Ï% உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நாள் சுற்றுலா திருகோணமலைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது சுமார் 30 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

Ï% பிரதேச செயலாளர் அல்ஹாஜ் ALM. சலீம் அவர்களின் 5 வருட சேவையை பாராட்டும் முகமாகவும் அவர்களின் 5 ஆண்டு திட்டத்தின் அடைவுகளை வெளிக்கொணரும் வகையிலும் 2013ம் ஆண்டிற்கான 1வது நாட்காட்டி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இது சாய்ந்தமருது பிரதேச செயலக 1வது நாட்காட்டியாக அமைவது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பிரதேச செயலகத்தில் இவ்வாறு சஞ்சிகை வெளியிடுவதும் சேவையாற்றும் உறுப்பினர்களது ஆக்கங்கள் அதில் வெளிக்கொணரப்படுவதும் என்றும் வரவேற்கத்தக்கதும் நினைவுகூரக் கூடியதுமாகும்.

**MIM. றியாஸ் (BA.Hons) -செயலாளர்**

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012ம் வருடத்தின் கலாசார அடைவுகள்.

* காரியாலய வெளியீடாக அரையாண்டு இதழாகிய சாந்தம் என்ற மலர் வெளியீடு செய்யப்பட்டது.

* அரபு எழுத்தணிப் பயிற்சிப் பட்டறை ஒன்று கிழக்கு மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் ஒரு முழுநாள் நிகழ்வாக பாடசாலை, மதரசா மற்றும் அகதியாப் பாடசாலை மாணவர்களுக்காக ஏற்பாடு செய்து அல்-ஜலால் வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது.

* பாடசாலை மாணவர்களுக்கிடையே கலாசார சாகித்திய போட்டிகள் நடாத்தப்பட்டது. அதில் ஒரு அம்சமாக பாடல் போட்டிகளையும் கையெழுத்துப் போட்டிகளையும் பிரதேச செயலகத்தில் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டது. பின்னர் இதன் தெரிவுகள் மாவட்ட செயலகத்துக்கும், கலாசார அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

* சாய்ந்தமருதில் புதிதாக ஒரு பொல்லடிக் குழுவான தக்வா கோலாட்ட குழுவினை அமைத்து அக்குழுவினை அக்கரைப்பற்றில் நடைபெற்ற அம்பாரை மாவட்ட பிரதேச செயலகங்களுக் கிடையிலான போட்டியில் கலந்து கொள்ளச் செய்தமை. இதில் இக்குழு 3ம் இடத்தைப் பெற்றது. இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பின்னர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இக்குழுவை பதிவு செய்வதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

* ரமழான் மாத இப்தார் நிகழ்வு ஒன்று பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்டது.
* ஜனாதிபதியின் பிறந்ததின நிகழ்ச்சிக்காக சகல பள்ளி வாசல்களிலும் துஆப் பிரார்த்தனைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது

* தயட்ட கிருள்ள நிகழ்வுக்காக பாடசாலை மட்டத்தில் சித்திரம், கட்டுரைப் போட்டிகளை ஒழுங்கு செய்து தெரிவுகள் மாவட்ட செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.. நாட்டார் கதைகள் புத்தக வெளியீட்டுக்காக எமது பிரதேசத்திலிருந்து சிறந்த கலைஞர்களிடமிருந்து பெறப்பட்ட நாட்டார் கதைப்பிரதிகள் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

* சிறுவர் சித்திரப் போட்டிகளை பாடசாலை மட்டத்தில் நடாத்தி அதன் பெறு பேறுகளும், கலைஞர்களிடமிருந்து பெற்ற நாடகப் பிரதிகளும் கலாசார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

* அரச உத்தியோகத்தர்களுக்கான ஆக்கத் திறன் போட்டிக்கு ஆக்கங்கள் அனுப்பி வைக்கப்பட்டது. இதில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• கலாபூசணம் தெரிவுக்காக விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டது. இதில் எமது பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் கலாபூசணங்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

• அம்பாறை மாவட்டத்திற்கான தமிழ இலக்கிய விழா, ஆய்வரங்கு போன்றவை அக்கரைப்பற்றில் நடாத்தப்பட்டது

• சென்ற வருடத்திற்கான கிழக்குமாகாண கலாசார விழா நிகழ்ச்சிகள் திருகோணமலையில் நடைபெற்றது இதில் முதலமைச்சர் விருதுக்காக எம்மால் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பத்தில் ஒருவர் விருதுக்காக தெரிவு செய்யப்பட்டார் சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த இருவரின் நூல்கள் கிழக்குமாகாண சாகித்திய விழாவில் விருக்காக தெரிவு செய்யப்பட்டது.

**எம்.ஐ.எம். அஷ்ரப்**
**கலாசார உத்தியோகத்தர்**

## மூன்றுக்கு பெருமை சேர்ப்பது

1. பொருள்- அறம், பொருள், இன்பம்
2. சுடர் - சூரியன், சந்திரன், நெருப்பு
3. உலகம்- பூலோகம், பரலோகம், பாதாளம்
4. தொழில்- ஆக்கல், காத்தல், அழித்தல்
5. அரசர் - சேரர், சோளர், பாண்டியர்
6. தமிழ் - இயல், இசை, நாடகம்
7. காலம் - இறப்பு, நிகழ்வு, எதிர்வு
8. இடம் - தன்மை, முன்னிலை, படர்க்கை
9. கடுகம் - சுக்கு, திப்பிலி, மிளகு
10. கனி - மா, பலா, வாழை
11. பொறி - மனம், வாக்கு, காயம்
12. பிணி - வாதம், பித்தம், கபம்

**AJM. ஹினோ வபீf (Gr- 7)**
**கமு / மஹ்மூத் மகளிர் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுமைப் பெண்ணே !

கலைந்து விட்ட கனவுகளுக்காய்
மனம் கலங்காதே
மரத்துப் போன மனங்களுக்காய்
மனம் உடைந்து விடாதே.
இழந்து போன இளமைக்காய்
இரந்து வாழாதே
இழகிப் போன உள்ளத்துக்காய்
மனம் உருகாதே
தொலைந்து போன தொல்லைகளுக்காய்
தொட்டில் கட்டாதே
பறந்து போன பட்டத்துக்காய்
வாழ்க்கையை பறக்கவிடாதே
மலர்ந்து விட்ட மலருக்காய்
மனதை மாற்றாதே
கடந்து சென்ற காலத்துக்காய்
கண்ணீர் சிந்தாதே
நாளை எனும் வாழ்க்கைக்காய்
இன்றைய நாளை மறந்து விடாதே
பூக்கப் போகும் புது வாழ்க்கைக்காய்
இளம் தென்றலாய் இரு
மலரப் போகும் மலருக்கு
அதன் வாசனையாக இரு
புதுமை எனும் உலகில்
புதுமையாக இரு
புதுமைப் பெண்ணே
இன்றே புறப்படு
நாளை உனக்காக
இந்த உலகம் உன்னை
வரவேற்க காத்திருக்கின்றது
பெண்மை போற்றும் பெண்ணாக
பெருமையுடன் வாழ வாழ்த்துகிறேன்
புதுமை பெண்ணே
நீ வளர்க! நீ வாழ்க!

A.M. அஸ்ரப் கான்
(பட்டதாரிப் பயிலுனர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் பொன்னானது

மனிதர்கள் இரு பெரும் அருட்கொடைகளின் விஷயத்தில் அதிகமாக ஏமாந்த நஷ்டமடைந்து விடுகின்றனர்.

1. ஆரோக்கியம் 2.ஓய்வு நேரம் (ஆதாரம் : புகாரி, அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி))

நேரம் என்ற அருட்கொடையை பலர் வீணடிக்கிறார்கள். அதை எவ்வாறு பயனுள்ளதாய் மாற்றலாம், நேரத்தைப் பற்றிய ஒரு கணிப்பீடுதான் என்ன?

"கடந்துவிட்ட காலம் செல்லாத காசோலை, எதிர் வரும் காலம் வாக்குறுதிச் சீட்டு, நாம் கிடைக்கப் பெற்ற நிகழ்காலம் தற்போது நம் கையிலுள்ள பணம் போன்றது" என்கிறது ஒரு ஆங்கிலப் பழமொழி. நம்மிடமுள்ள பணத்தை நாம் நல்ல முறையில் பயன்படுத்தினால் அதற்குத் தக்கவாறு பலனை அடைந்து கொள்ளலாம். பணத்தை நாம் இழந்துவிட்டாலும் திரும்பப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் காலத்தை நாம் திரும்பப் பெறுவது சாத்தியமில்லாத கூற்று. எனவே காலத்தை செல்வத்தைச் செலவழிப்பதைவிட மேலானதாக நாம் செலவழிக்க வேண்டும்.

நம்மில் இருவர் சந்தித்துக்கொள்ளும் போது வீண்பேச்சுக்களில் ஈடுபட்டுவிடுகிறோம். பொழுது போகவில்லை, பேச்சுத்துணைக்கு யாருமில்லை எனத் தேடிப்பிடித்து வீண் பேச்சுக்களைப் பேசி நேரத்தைக் கழித்து வருகிறோம். வீண் பேச்சுக்கள் புறம்பேசுதலில் கொண்டுசென்றுவிடுகிறது. ஏதோ ஒரு வழியில் பெரும்பாலானோர் தன்னுடைய பொன்னான நேரத்தைத் தங்களை அறிந்தோ அறியாமலோ பல வழிகளிலும் வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நமக்குப் பல அரிய கண்டுபிடிப்புக்களைத் தந்த அறிவியல் வல்லுணர்களின் பட்டியலில்...விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள், டெலிபோனைக் கண்டுபிடித்த அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல், கம்பியூட்டரைக் கண்டுபிடித்த சார்ல்ஸ் பேப்பேஜ், மின்சாரத்தைக் கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன், ரேடியோவைக் கண்டுபிடித்த மார்க்கோனி...இவர்களெல்லாம் மனித குலத்திற்கு பல அரிய கண்டுபிடிப்புக்களை தந்து சரித்திரத்தில் இடம்பெற்றவர்கள். தங்கள் நேரங்களை அர்ப்பணித்து தங்கள் கண்டுபிடிப்புக்களை மக்களுக்கு பயனுள்ளவகையில் ஆக்கியவர்கள். அதனால் மக்கள் மனங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்

எனவே நமக்குக் கிடைத்திருக்கும் ஓய்வு நேரங்களை அல்லாஹ்வுக்கு விருப்பமான மற்றும் அவனது தூதர் நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்த வழிகளில் பயன்படுத்தி அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவோம்.

**M.F.F இஷ்பா மர்யம்**
**அல்ஹிலால் வித்தியாலயம்**
**சாய்ந்தமருது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹைக்கூ...

| | |
|---|---|
| பூமி | -ஆண்டவன்<br>விளையாடும் பந்து |
| சுனாமி | -பூமி அன்னையின்<br>கொட்டாவி |
| சூறாவளி | -வானவர்களின்<br>குளிர்காலத் தும்மல் |
| மின்னல் | -தேவலோகக் கன்னியரின்<br>கண்சிமிட்டல் |
| முழக்கம் | -நரகலோகத்தின்<br>அவலக் குரல் |
| மழை | -சுவர்க்க வாசிகளின்<br>ஆனந்தக் கண்ணீர் |
| வானவில் | -ஆகாயத்தின்<br>நெய்யாத புடவை |
| பௌர்ணமி | -வானத்தில்<br>மாதத்தின் முற்றுப் புள்ளி |
| எரிகல் | -வானவர்கள் விடும்<br>வான வேடிக்கை |
| எரிமலை | -பூமியன்னை<br>எடுக்கும் வாந்தி |
| இரவு பகல் | -உலகின் சுகமான<br>இதயத் துடிப்பு |
| நில நடுக்கம் | -பூமியின்<br>வயது முதிர்வு |
| அமாவாசை | -விண்ணவர்களின்<br>துக்க தினம் |

**மும்தாஜ் ஜெஸ்மின் மர்யம்**
**பிரதேச செயலகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிலும் வேண்டும்

வீரனாய் எழுந்திடு
தலைவனாய் உயர்ந்திடு
நீதிக்காய் வாழ்ந்திடு
வெற்றிக்காய் உழைத்திடு

காலத்தை வென்றிடு
ஜாலத்தை மறந்திடு
உள்ளத்தை கவர்ந்திடு
உழைத்தே நிலைத்திடு

பாசத்தில் உறைந்திடு
பக்குவமாய் இருந்திடு
கல்விக்காய் முயன்றிடு
காரியத்தை அடைந்திடு

உறவை மதித்திடு
அன்பால் கனிந்திரு
கடவுளை நம்பிடு
செல்வத்தை பகிர்ந்திடு

மறுமைக்காய் அழைத்திடு
நல்லதை நினைத்திடு
கனவினை கலைந்திடு
நன்மைக்காய் பணிந்திடு

**M.ஹுஸைன் முபாரக் (J.P)**
**பட்டதாரிப் பயிலுனர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளதைக் கொண்டு
## பொருந்திக் கொள்ளாதவரை

என்றோ அடித்து ஓய்ந்தது சுனாமி
தடயங்களும் தூர்ந்து போனது
ஆனால் இன்னும் தொடர்கதையாய்
வீடற்றோர் பிரச்சினை
அப்போது முளைத்த அகதி முகாம்களும்
ஆங்காங்கே தூறல்களாய்
புதிய இடத்தில் புதுமனை பெற்றும்
தனக்கு இது ஒன்று போதும்
எனும் மனநிலை என்றோ மாறிப்போனது

அன்று நேசரி ஓதப் பள்ளி சென்றது
இன்று குமராகி நிற்குது குடும்பம் நடாத்துது
அத்தனைக்கும் வேண்டும் ஒவ்வொரு மனை
அதுவரை அகற்ற முடியாதென
அடம்பிடிக்கிறது கொட்டில்கள்
என்ன செய்வார் பிரதேச செயலாளர்
அடுத்ததாய் பெறப்போகும் மகவுக்கும்
மணமான மகளின் மகவுக்கும்
மனை கொடுப்பது இவர் கடமையா?

எதிரெதிரே நாமும்தான் பார்த்திருந்தோம்
அறுபத்தைந்து மீட்டருக்குள்
இருந்தோமில்லையே என்ற கவலை ஒருபுறம்
நின்று கதைத்தோரை சொந்தங்களாக்கி
குடும்பத்தில் பலபேரை இழந்தோமென்றும்
ஒன்றிரண்டை காவு கொடுத்து
இருந்ததனைத்தும் இல்லாமல் போனதென்றும்
எங்கள் வாசலிலும் அலை வந்து
எட்டிப் பார்த்து ஈரமாக்கிச் சென்றதில்
நாமும்தான் பாதிக்கப் பட்டோம் என்றும்
தினம் தினம் வந்து
சோகம் வடித்துச் செல்வோர் எத்தனைபேர்
என்று கிடைக்கும் இவை அத்தனைக்கும் தீர்வு?
உள்ளதைக்கொண்டு பொருந்திக் கொள்ளாதவரை

**M.I.M**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் தாழ்த்தாதீர்

மரணவேளை வந்து விட்டால் மலக்குகள் மனித உயிரை ஒரு கணம் முந்தவோ பிந்தவோ மாட்டாமல் காலம் தாழ்த்தாது குறிக்கப்பட்ட நேரத்தில் அவனது உயிரை கச்சிதமாக பிடுங்கி எடுத்து விடுவார்கள். இந்த நிலை நமக்கு வருமுன் மரணத்தை நோக்கிய இந்த வாழ்க்கைப் பயணத்தில் கிடைக்கப் பெற்ற இந்த அரிய நேரத்தை சரியான முறையில் பயன்படுத்த இன்றே ஆயத்தமாகுவோம்.

தொழுகை நம் ஒவ்வொருவர் மீதும் நேரம் குறிக்கப்பட்ட ஒரு கடமையாகும் தொழுகைகளை அதற்குரிய நேரத்தில் தொழுங்கள் உள்ளத்தாலும் நாவாலும் திக்ர் செய்யுங்கள் சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு"அக்பர் என்று கூறுவதும் அவனிடத்தில் தர்மமாகக் கணிக்கப்படுகின்றது. இவை ஒவ்வொன்றும் சொல்வதற்கு ஒருவினாடியே ஆகும் மு.ஃ.மின்களின் உள்ளம் எந்த நேரமும் அல்லாஹ்வை நினைவு கூர்ந்தவையாகவே இருக்கும். திசை தெரியாத பயணத்தை மேற்கொள்வது போல் நாம் வாழ்வை அமைத்துக் கொள்ளாமல் மறுமையில் வெற்றியடையக் கூடிய வழிகளறிந்து அதன் படி நடந்து மறுமையிலே சொர்க்கத்தை அடைந்து கொள்வோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org